நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

**ஈழத்து முத்துக்கள் 04**

# கலைஞர்
# சித்தி அமரசிங்கம்

இலங்கையில் தமிழ்சினிமாத்துறை ஒரு தொழிற்துறையாக வளரும் சாத்தியக்கூறு இல்லாமல், அவ்வப்போது சில கலைஞர்களும், விட்டகுறை, தொட்டகுறையாக கலையில் ஆர்வம் கொண்ட சில பிரமுகர்களும், தங்கள் ஆசைக்காக – கவனியுங்கள், ஆசைக்காகத்தான் - தமிழ்ப்படங்களை தயாரித்து கொண்டிருந்த காலம். இலங்கை தயாரிப்புக்களை திரையிடுவதற்கு தியேட்டர்கள் கிடைப்பதே மகாகஷ்டம். அரிதாக திரைக்கு வரும் படங்களும் அனேகமாக வந்த சுவடு தெரியாமல் ஓடி மறைந்து விடும். இந்த நிலையில் ஒரே நேரத்தில் யாழ்ப்பாணத்தில் அருகருகே இரண்டு தியேட்டர்களில் இரண்டு இலங்கைத்தமிழ்ப்படங்கள் ஓடிக்கொண்டிருந்தன என்பது உங்களுக்கு தெரியுமா? ஒன்று நான் நடித்த வாடைக்காற்று. மற்றது சித்தி அமரசிங்கம் நடித்த தென்றலும் புயலும். இது நடந்தது 1978ல்.

'தென்றலும் புயலும்'' படத்தை தயாரித்து, பிரதான பாத்திரத்தில் நடித்த வேதநாயகம் என்ற மருத்துவரும், நகைச்சுவைப் பாத்திரமாக ஆரம்பித்து குணசித்திரபாத்திரமாக மாறிய சித்தி அமரசிங்கமும் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்தவர்களாக இருந்ததினால், அந்த மண்ணின் அழகான காட்சிப்பதிவுகளை தங்கள் திரைப்படத்தில் இடம்பெற வைத்திருந்தார்கள்.

சிலோன் ஸ்ரூடியோவில் இரண்டு படங்களினதும் உள்ளரங்கக்காட்சிகள் படமாக்கப்பட்ட போது அவரைச் சந்தித்திருக்கிறேன். ஒரு வார்த்தை அன்பாகப் பேசினால் 'பட்'டென்று ஒட்டிக்கொண்டு நீண்டகால அறிந்தவரைப் போல மனம் விட்டுப்பேசும் சுபாவம். தன்னை முன்னிலைப்படுத்துவதைவிட, தனது பிறந்த ஊரான திருகோணமலையினைச் சார்ந்த கலைஞர்களைப்பற்றி, எழுத்தாளர்களைப் பற்றி நிறையத் தகவல்களை சேகரித்து வைத்திருந்தார். ஒரு முறை, இலங்கை வானொலியில் 'கலைக்கோலம்' நிகழ்ச்சியில் பங்குபற்ற அவரை அழைத்தேன். ஒரு நீண்ட கட்டுரை எழுதிக்கொண்டு வந்தார். நேரக் கட்டுப்பாடு காரணமாக, அவரது முழுக் கட்டுரையையும் சேர்த்துக்கொள்ள முடிய



வில்லை. ஆனால் அந்த கட்டுரையில் ஒரு இடத்திலாவது தன்னுடைய கலைத்துறை முயற்சிகளைப்பற்றி குறிப்பிடாமல் என்னை அசத்திவிட்டவர்.

எங்கள் மண்ணில் கலைத்துறையில் ஈடுபட்டு அதனால் வருமானம் பெற்ற தமிழ்க்கலைஞர்கள் என்றால் மிக அரிது. சித்தி அமரசிங்கம் அதற்கு விதிவிலக்காக இருக்கமுடியாது. கலைஆர்வத்தினால் அவர் நாடகம்,திரைப் படம், வில்லுப்பாட்டு என்று செய்துகொண்டும், தன்னுடைய நூல்களையும், மற்றவர்களின் நூல்களையும் 'ஈழத்து இலக்கியச்சோலை' என்ற தனது பதிப்பகத்தின்மூலம் வெளியிட்டும் பணரீதியாக லாபமடைந்தவராக எனக்குத் தெரியவில்லை.

அந்நாளில் தலைநகரில் இருந்த ஊடகங்கள் கூட, வெளிப்பிரதேசக் கலைஞர்களை பெரிதாக தூக்கிவிட நினைக்க மாட்டார்கள். அந்த நேரத்தில் வெளிப்பிராந்திய கலைஞர்களையும், படைப்பாளிகளையும், நம்மவர்கள் என்ற ரீதியில் என்னால் முடிந்தளவு ஊக்குவிக்க ஏதோ முனைந்திருக்கிறேன். இந்த ஓட்டுதல் காரணமாக சித்தி அமரசிங்கம் தன் புத்தகக் கட்டுக்களுடன், திருகோணமலையில் இருந்து கொழும்பில் என்வீட்டுக்கு வந்து போவார். தன் எதிர்காலத்திட்டமாக தனது மண்ணின் திறமைமிக்க பெருமக்களைப்பற்றி நூல் ஒன்று எழுதப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அவர் கலைஞர், எழுத்தாளர், பதிப்பாளர் என்ற அடைமொழிகளுக்கு மேலாக நல்ல மனிதராக, தனது ஊரை, அங்கு வாழும் மக்களை, குறிப்பாக கலைஞர்களை மதித்துப்போற்றும் சமூக நோக்குடையவராக விளங்கினார் என்பது என் எண்ணம்.

2007ல் அவர் மறைந்த சேதி, புலம்பெயர் வாழ்வின் அவதிகளுக்கிடையே எனக்கு வெகு தாமதமாகவே கிடைத்தது.

மறக்கக்கூடிய
மனிதரல்ல
அவர்.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

www.thaiveedu.com